ஜனவரி – மார்ச் (2026)

# கடந்து வந்த பாதை

மின்னிதழ்

جماعت اسلامی ہند

WWW.JIHTN.ORG




## ஈரான் உச்சத் தலைவரின் இந்திய பிரதிநிதியுடன் சந்திப்பு



**ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்**

தமிழ்நாடு - புதுச்சேரி

# தூர்தர்ஷன் முன்னாள் செய்தி வாசிப்பாளருடன் ஜமாஅத் மகளிர் அணியினர் சந்திப்பு.



*03.01.2026* சனிக்கிழமை, தூர்தர்ஷன் செய்தி வாசிப்பாளர் ஆண்டாள் அவர்கள் உடுமலை வரலாற்று ஆய்வு நடுவம் நிகழ்விற்கு வருகை புரிந்திருந்தார். முன்னாள் தூர்தர்ஷன் செய்தி வாசிப்பாளரும் எழுத்தாளருமான அவர்களை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உடுமலை மகளிரணி சார்பாக சந்தித்து, ஜமாஅத் பணிகள் குறித்து அறிமுகம் செய்து, 'சமரசம் உதயதாரகை' வழங்கினோம். மிகுந்த மகிழ்வுடன் எங்களை பாராட்டி, தொடர்ந்து தொடர்பில் இருப்போம் என கூறி அலைப்பேசி எண்ணை பெற்றுக் கொண்டார். இந்த சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.



## மாநிலப் பொறுப்பாளர்கள் வருகை...

07.01.2026, புதன்கிழமை, JIH மகளிரணி மாநிலத் தலைவர் சகோதரி பாத்திமா ஜலால் மற்றும் மாநில அமைப்பு செயலாளர் K. ஜலாலுதீன் அவர்கள் மங்கலத்திற்கு வருகை தந்து, ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்களை சந்தித்து முக்கியமான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கினர். இந்த நிகழ்வில் கோவை மண்டல அமைப்பாளர் ஜெய்லானி அவர்களும், மங்கலம் கிளைத்தலைவர் அப்துல் வதூத் அவர்களும் உடன் கலந்து கொண்டனர். மேலும், 2 உறுப்பினர்கள், 3 ஊழியர்கள் மற்றும் 4 விண்ணப்ப ஊழியர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



## சாலிடாரிட்டி பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு...

சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு சார்பில் "இளைஞர்கள் தேர்தல் அறிக்கை" வெளியீடு




சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு, இளைஞர்களை சரியான பாதையில் வழிநடத்தி, அவர்களை சமூகத்தின் பொறுப்புணர்வுள்ள குடிமக்களாக உருவாக்கும் நோக்குடன் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு சமூக, கல்வி மற்றும் விழிப்புணர்வு பணிகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. போதைப்

பழக்கம், ஆபாசம் போன்ற இளைஞர்களை சீரழிக்கும் சவால்களுக்கு எதிராக தொடர்ச்சியான பிரச்சாரங்களும், களப்பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோல், வேலைவாய்ப்பு, அறிவுசார் வளர்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளித்து, பல்வேறு பகுதிகளில் பயிற்சி பட்டறைகள் மற்றும் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, தமிழகத்தில் முதல் முறையாக இளைஞர்களை மையப்படுத்திய "இளைஞர்கள் தேர்தல் அறிக்கை" சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு சார்பில் ஜனவரி 6, 2026 அன்று கோவை பத்திரிக்கையாளர் மன்றத்தில் வெளியிடப்பட்டது.



இளைஞர்கள் தேர்தல் அறிக்கை வெளியீடு

கோவை

சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பின் மாநிலத் தலைவர் முஹம்மது ரியாஸ் கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சாலிடாரிட்டி அமைப்பு இளைஞர்களை சரியான பாதையில் வழிநடத்தி, அவர்களை சமூகத்தின் பொறுப்புணர்வுள்ள குடிமக்களாக உருவாக்கும் நோக்குடன், தமிழ்நாடு முழுவதும் பல்வேறு சமூக, கல்வி மற்றும் விழிப்புணர்வு பணிகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, முதல் முறையாக இளைஞர்களை மையப்படுத்திய 'இளைஞர்கள் தேர்தல் அறிக்கை' வெளியிட்டுள்ளோம். இத்தேர்தல் அறிக்கையை, அனைத்து அரசியல் கட்சிகளிடமும் வழங்கி, அவர்களது தேர்தல் அறிக்கைகளில் வாக்குறுதிகளாக இணைக்கவும், அவற்றை நடைமுறைப் படுத்தவும் எங்கள் அமைப்பு வலியுறுத்தும்.

எங்கள் தேர்தல் அறிக்கையின் முதன்மை கோரிக்கையாக கல்வி, வேலைவாய்ப்பு, ஆரோக்கியம், விளையாட்டு, சமூக பங்களிப்பு ஆகிய துறைகளை உள்ளடக்கிய, விரிவான தமிழ்நாடு இளைஞர் கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

இளைஞர் நலத்திட்டங்களைக் கண்காணித்து பரிந்துரை செய்யும் சட்டப்பூர்வ அமைப்பாக, தமிழ்நாடு இளைஞர் ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்பதாகும், என்றார்.

அமைப்பின் மாநிலச் செயலாளர்கள் ஜாபர் சாதிக், ஹபீப் ரஹ்மான் ஆகியோர் உடனிருந்தனர்.

கோவையில் இளைஞர்கள் தேர்தல் அறிக்கையை வெளியிட்ட சாலிடாரிட்டி அமைப்பின் நிர்வாகிகள்.

படம்: ஜெ.மனோகரன்

இந்நிகழ்வில் பத்திரிக்கையாளர்களை வரவேற்றும், "இளைஞர்கள் தேர்தல் அறிக்கை" உருவான பின்னணி, அதன் அவசியம் குறித்து சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு – தமிழ்நாடு மாநிலச் செயலாளர் சகோ. ஹபீப் ரஹ்மான் B.E., அவர்கள் தொடக்க உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து "இளைஞர்கள் தேர்தல் அறிக்கை" வெளியீடு நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் சாலிடாரிட்டி தமிழ்நாடு தலைவர் திரு. முஹம்மது ரியாஸ் B.E., B.A., M.B.A., மாநிலச் செயலாளர்கள் – சகோ. ஜாபர் சாதிக், சகோ. ஹபீப் ரஹ்மான், செயற்குழு உறுப்பினர்கள் – மௌலவி. முஹம்மது நாசர் புஹாரி, சகோ. சபீர் அகமது, சாலிடாரிட்டி கோவை மாவட்ட செயலாளர் – சகோ. ரியாஸ் ஆகியோர் இணைந்து "இளைஞர்கள் தேர்தல் அறிக்கை"யை வெளியிட்டனர்.

இளைஞர்களை மையப்படுத்திய முதலாவது தேர்தல் அறிக்கை!
இப்பத்திரிக்கையாளர் சந்திப்பில் உரையாற்றிய சாலிடாரிட்டி தமிழ்நாடு தலைவர் திரு. முஹம்மது ரியாஸ் அவர்கள், "தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக, இளைஞர்களின் எதிர்காலத்தை மையமாகக் கொண்டு இத்தேர்தல் அறிக்கையை சாலிடாரிட்டி வெளியிடுகிறது.

இந்த அறிக்கை தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள இளைஞர்களோடு கலந்துரையாடியும், கல்வி, வேலைவாய்ப்பு, சமூகநலம், மனித உரிமைகள் உள்ளிட்ட துறைகளில் உள்ள வல்லுநர்களுடன் ஆலோசித்தும் உருவாக்கப்பட்டுள்ளது.

இளைஞர்கள் மேம்பாடு மற்றும் அவர்களின் முழுமையான வளர்ச்சிக்கான கோரிக்கைகளை உள்ளடக்கிய இத்தேர்தல் அறிக்கையை, அனைத்து அரசியல் கட்சிகளிடமும் வழங்கி, இக்கோரிக்கைகளை அவர்களது தேர்தல் அறிக்கைகளில் வாக்குறுதிகளாக இணைக்கவும், அவற்றை நடைமுறைப்படுத்தவும் சாலிடாரிட்டி

வலியுறுத்தும்" என்றார். மேலும் அவர் பேசுகையில், இத்தேர்தல் அறிக்கையின் முதன்மை கோரிக்கையாக கல்வி, வேலைவாய்ப்பு, ஆரோக்கியம், விளையாட்டு, சமூக பங்களிப்பு ஆகிய துறைகளை உள்ளடக்கிய விரிவான "தமிழ்நாடு இளைஞர் கொள்கை" உருவாக்கப்பட வேண்டும் என்றும், இளைஞர் நலத்திட்டங்களைக் கண்காணித்து பரிந்துரை செய்யும் சட்டபூர்வ அமைப்பாக "தமிழ்நாடு இளைஞர் ஆணையம்" அமைக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டல், திறன் மேம்பாட்டு மையங்கள் மற்றும் அரசு பள்ளிகள் மேம்பாடு, விளையாட்டு வசதிகள், மனித உரிமைகள் பாதுகாப்பு, போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் இளைஞர்களை பாதிக்கும் பொதுப் பிரச்னைகள் போன்ற பல்வேறு தலைப்புகளில் கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

அதோடு, மாவட்டங்கள் ரீதியாகவும் தனிப்பட்ட கோரிக்கைகள் இத்தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

இளைஞர்கள் நலன் மற்றும் மேம்பாடு தொடர்பாக நீண்ட ஆய்வு மற்றும் கலந்துரையாடல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இத்தேர்தல் அறிக்கையை மக்களிடமும், அரசியல் பிரமுகர்களிடமும் கொண்டு சேர்க்க பத்திரிக்கை நண்பர்கள் துணை நிற்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

நிகழ்வின் நிறைவாக, சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு – தமிழ்நாடு மாநிலச் செயலாளர் சகோ. ஜாபர் சாதிக் அவர்கள், வருகை தந்த பத்திரிக்கையாளர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்தார்.



## சமத்துவ நடைபயணத்தை முன்னிட்டு – சிறப்பு சந்திப்பு...

சமத்துவ நடைபயணத்தை முன்னிட்டு துவரங்குறிச்சிக்கு வருகை தந்த ம.தி.மு.க. தலைவர் திரு. வைகோ அவர்களை, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துவரங்குறிச்சி கிளை மகளிர் அணியின் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் நேரில் சந்தித்தனர்.



இந்த சந்திப்பின் போது, "இதுதான் இஸ்லாம்" மற்றும் "இம்மாமனிதரை பற்றி தெரிந்து கொள்வோம்" என்ற புத்தகங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நல்ல பரிமாற்றத்தையும் புரிதலையும் உருவாக்கிய பயனுள்ள சந்திப்பாக அமைந்தது.

## பண்புப் பயிற்சி சந்திப்பு – தஞ்சாவூர்




14.01.2026 அன்று தஞ்சாவூரில், இஸ்லாமிய மாணவியர் அமைப்பு (GIO) மற்றும் மகளிரணி சார்பாக நடைபெற்ற பண்புப் பயிற்சி சந்திப்பு, ஆன்மிகத் தூண்டுதலை அளித்த அர்த்தமுள்ள நிகழ்வாக அமைந்தது.

இது முதன்மையாக ஒரு பண்புப் பயிற்சி கூட்டமாக திட்டமிடப்பட்டிருந்தாலும், Jamaat Service Department மூலம் ஏழைகளுக்கு குளிர்கால போர்வைகள் வழங்கும் சேவை நடவடிக்கையும் இதில் இணைக்கப்பட்டது. இந்த மனிதநேய செயல், நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் மகிழ்ச்சியும் மனநிறைவும் அளித்தது.

நிகழ்ச்சி, GIO சகோதரி ஷிஃபானா அவர்களின் சிறப்பான கிராஅத் மூலம் தொடங்கியது. தொடர்ந்து, தஞ்சாவூர் GIO செயலாளர் சகோதரி ரஹீமா பர்வீன் அவர்கள் வரவேற்பு உரையாற்றினார்.



JIH திருச்சி மண்டலப் பிரிவு அமைப்பாளர் ஜனாப் சயீத் முகம்மது அவர்கள் வழங்கிய தலைமை உரை, உள்ளார்ந்த தூய்மை மற்றும் நமது பொறுப்புணர்வின் அவசியத்தை வலியுறுத்தியது.

முக்கிய உரையை, திருச்சி அஸ்ஸலாம் இஸ்லாமிக் கல்லூரியின் பேராசிரியர் ஜனாப் அமனுல்லாஹ் (M.Tech.) அவர்கள் வழங்கினார். அவரது உரை, ஈமான் மற்றும் அல்லாஹ்வுடன் உள்ள நமது உறவைப் பற்றி ஆழமான சுயசிந்தனையைத் தூண்டியது. இறுதியாக, தஞ்சாவூர் GIO தலைவி சகோதரி ஆயிஷா அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

இந்த கூட்டம், அல்லாஹ்வை அறிவால் அறிதல் மட்டுமல்ல, இதயத்தால் உணர்வதே உண்மையான ஈமான் என்பதை தெளிவுபடுத்தியது. இந்த நிகழ்வில் GIO பெண்கள் வட்டம் மற்றும் Solidarity உறுப்பினர்கள் உட்பட மொத்தம் 50 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## இந்தியக் குடியரசு தினச் செய்தி

இந்தியாவின் 77-வது குடியரசு தினத்தை முன்னிட்டு, நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தின் அடிப்படையில் ஒரு வலுவான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான நமது உறுதிப்பாட்டை மீண்டும் புதுப்பிப்போம். கடந்த தசாப்தங்களில், இந்தியா பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைப்



பதிவு செய்துள்ளது. பொருளாதார வளர்ச்சி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம், கல்வி வாய்ப்புகளின் விரிவு ஆகியவற்றின் மூலம் உலகளவில் முன்னணி நாடாக இந்தியா திகழ்கிறது. ஆனால் இதே நேரத்தில், இந்த குடியரசு தினம் ஒரு சுயபரிசோதனைக்கான தருணமாகவும் அமைகிறது. சமூகப் பிளவு அதிகரித்தல், மாற்றுக் கருத்துகளுக்கான இடங்கள் சுருங்குதல், பத்திரிகை சுதந்திரம் குறைவடைதல், அதிகார வர்க்கத்துடனான நெருக்கமான முதலாளித்துவம் (குரோனி கேபிடலிசம்) வலுப்பெறுதல் போன்றவை கவலைக்குரியவை மேலும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தல் மற்றும் அரசியலமைப்பு நிறுவனங்களின் மீது அழுத்தங்கள் உருவாகுதல் ஆகியவை, நாட்டின் எதிர்காலம் குறித்து ஒவ்வொரு குடிமகனையும் சிந்திக்க வைக்கின்றன. நமது குடியரசின் உண்மையான பலம் பெரும்பான்மை அல்லது அதிகாரத்தில் இல்லை; மாறாக, ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை, கண்ணியம் மற்றும் சமமான குடியுரிமை வழங்கப்படுவதில்தான் உள்ளது.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நமது அரசியலமைப்பின் மதிப்புகளை மீண்டும் உறுதிப்படுத்துவோம்:

- நீதியை நிலைநாட்டுவோம்.
- சுதந்திரத்தை பாதுகாப்போம்.
- பன்முகத்தன்மையை கொண்டாடுவோம்.

அமைதி, சமூக நல்லிணக்கம் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி நிலவும் இந்தியாவை உருவாக்க நாம் பாடுபடுவோம். ((சையத் சஆதாத்துல்லா ஹுசைனி தலைவர், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், புது தில்லி))

## அந்நூர் மதரஸாவில் தர்பியா முகாம் நடைபெற்றது...



(08.02.26) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை, தாங்கல் பகுதியில் உள்ள அந்நூர் மதரஸாவில் தொடங்கிய தர்பியா முகாம், காலடிப்பேட்டை கிளை மற்றும் மண்ணடி பகுதி இணைந்து நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி ஜனாப் அஜீஸ் லுத்ஃபுல்லாஹ் அவர்களின் திருக்குர்ஆன் உரையுடன் தொடங்கியது. தொடர்ந்து, மாநில மகளிர் அணி செயலாளர் சகோதரி ஃபாத்திமா ஜலால் அவர்கள் “ஜமாஅத் அமைப்பு சட்டமும், தலைமைக்கு கீழ்ப்படிதல்” என்ற தலைப்பில் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து “பன்மைச்சமூகத்தில் முஸ்லிம்களின் பங்கு” என்ற தலைப்பில் சகோ. சையது இப்ராஹிம் அவர்கள் உரையாற்ற, “தலைமுறை – ஓர் விளக்கம்” என்ற தலைப்பில் மாநில துணைத் தலைவர் சகோ. ஐ. ஜலாலுதீன் அவர்கள் உரையாற்றினார். இந்த முகாமில் 40 மகளிரும் 30 ஆண்களும் கலந்து கொண்டனர். பங்கேற்ற அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டது.





# அரபி மொழி வகுப்புகள் சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது...

கடந்த ஜனவரி 4, ஞாயிற்றுக்கிழமை மஃரிப் தொழுகைக்குப் பிறகு, எக்ஸ்பெர்ட்ஸ் ஆன்லைன் அகாடமி மற்றும் ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த் மதரஸா அந்நூர், தாங்கல் ஆகியவை இணைந்து அரபி மொழி வகுப்புகளுக்கான சான்றிதழ் வழங்கும் விழாவை சிறப்பாக நடத்தியது.



நிகழ்ச்சி திருக்குர்ஆன் ஓதலுடன் துவங்கியது. ஜிஐஓவை சேர்ந்த ஷப்ரின் அவர்கள் இனிமையான ஓதலால் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து மௌலவி ஆசிரியர் அப்துல் ஹலீம் அல் புஹாரி அவர்கள் வரவேற்புரையாற்றி அனைவரையும் அன்புடன் வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து, வகுப்பில் பயின்ற மாணவிகளிலிருந்து மூவர் அரபி மொழியில் உரையாற்றி, வகுப்பு எவ்வாறு நடைபெற்றது, ஆசிரியர்களின் பயிற்சி முறை, தேர்வு நடைமுறை ஆகியவற்றை தெளிவாக விளக்கினர். இது நிகழ்ச்சிக்கு தனித்துவம் சேர்த்தது.

பின்னர் சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து நடைபெற்ற சிறப்பு உரைகளில், மௌலவி ஹிதாயத்துல்லா காசிமி அவர்கள் குர்ஆனை ஓதுவதின் முக்கியத்துவம், அதை புரிந்து ஓதுவதின் அவசியம் ஆகியவற்றை விளக்கினார். அகமது அலி சாஹிப் அவர்கள் அரபி மற்றும் உருது மொழிகளில் அரபி மொழியின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

மௌலானா மௌலவி அப்துல் ராசிக் அல் புஹாரி அவர்கள் தமது உரையில், ஒருவருக்கு பல மொழிகள் தெரிந்திருப்பது பல நபர்களின் திறனைப் போன்றது என்று கூறி, தமிழ், உருது, அரபி ஆகிய மொழிகளை கற்றலின் பயன்களை எடுத்துரைத்து மாணவிகளுக்கு ஊக்கமளித்தார்.

தொடர்ந்து எக்ஸ்பெர்ட்ஸ் ஆன்லைன் அகாடமி இயக்குநர் மௌலானா முஹம்மத் தாவூத் அன்சாரி அவர்கள், அரபி மொழி கற்றல் மூலம் முஸ்லிமல்லாதவர்கள் கூட குர்ஆனைப் புரிந்து கொண்டு இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் உணர்ச்சிகரமான நிகழ்வுகளை பகிர்ந்தார்.

இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக நடைபெற்ற சான்றிதழ் மற்றும் பரிசளிப்பு விழாவில் மொத்தம் 12 மாணவர்கள் சான்றிதழ்கள் பெற்றனர். ஒரு பகுதியை முடித்தவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன; மூன்று பகுதிகளை வெற்றிகரமாக முடித்த மாணவிகளுக்கு சான்றிதழ்கள், பரிசுகள் மற்றும் கேடயங்களும் வழங்கப்பட்டன.

மேலும், மாணவிகள் தாங்கள் அரபி மொழி கற்றதன் மூலம் பெற்ற நன்மைகள், குர்ஆனை எவ்வாறு புரிந்துகொள்ள முடிகிறது என்பதையும் பொதுமக்களுடன் பகிர்ந்தனர்.

இறுதியாக மௌலானா முஹம்மத் தாவூத் அன்சாரி அவர்கள் நன்றி உரையாற்றியதன் மூலம், நிகழ்ச்சி மகிழ்ச்சியுடன் நிறைவடைந்தது. இந்த விழா மாணவிகளுக்கும் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாகவும் உற்சாகமளிப்பதாகவும் அமைந்தது.

## அதிமுக அமைப்புச்செயலாளருடன் ஜமாஅத் நிர்வாகிகள் சந்தித்து மக்களின் தேர்தல் அறிக்கை வழங்கினர்...

பிப்ரவரி 07, 2026 சனிக்கிழமை அன்று, முன்னாள் அமைச்சரும், M. S. M. ஆனந்தன் அவர்களையும், அதிமுக அமைப்புச் செயலாளரும் பல்லடம் சட்டமன்ற உறுப்பினருமான அவர்களையும், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல அமைப்பாளர் ஜனாப் S.A.K. ஜெய்லானி அவர்கள் தலைமையில் சந்தித்து, ஜமாஅத் தமிழக கிளை வெளியிட்ட மக்களின் தேர்தல் அறிக்கை வழங்கப்பட்டது.




இந்த அறிக்கையில் தமிழக மக்களின் நலனை மையமாகக் கொண்டு பல்வேறு பொதுவான கோரிக்கைகள் இடம் பெற்றிருந்தன. அவற்றை அதிமுகவின் தேர்தல் அறிக்கையிலும் இணைக்கவும், எதிர்வரும் தேர்தலில் அதிமுக ஆட்சி அமைந்தால் அவற்றை நடைமுறைப்படுத்தவும் கோரிக்கை வைக்கப்பட்டது. மேலும், தமிழகத்தின் மதச்சார்பற்ற தன்மையை பாதுகாக்க வேண்டிய அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இந்த முக்கியமான சந்திப்பில் ஜமாஅத் மங்கலம் கிளை தலைவர் ஜனாப் அப்துல் வதூத், மங்கலம் ஊழியர் வட்ட பொறுப்பாளர் ஜனாப் கலீமுல்லாஹ், வெல்ஃபேர் கட்சியின் திருப்பூர் வடக்கு மாவட்ட தலைவர் ஜனாப் M. முஹம்மது ரிஜ்வான், பல்லடம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முதலிபாளையம் ஹவுசிங் யூனிட் ஜமாஅத் மகளிர் அணி பொறுப்பாளர்கள் ஜனாபா S. சக்கிளா மற்றும் ஜனாப் A. ஜரினா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பு மிகவும் பயனுள்ளதாகவும், எதிர்கால சமூகநல நடவடிக்கைகளுக்கான உறுதிமொழிகளை வலுப்படுத்துவதாகவும் அமைந்தது.

## பாபு ராஜபுரத்தில் ரமலானே வருக சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

12.02.2026 (வியாழக்கிழமை) அன்று, பாபுராஜபுரம் முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் வளாகத்தில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மற்றும் முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் நிர்வாகம் இணைந்து “ரமலானே வருக” என்ற தலைப்பில் சிறப்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சி திருக்குர்ஆன் கிராஅத் மற்றும் தஃப்சீர் மூலம் துவங்கப்பட்டது. இதனை மௌலவி சுல்தான் ஹஜ்ரத் (பாபுராஜபுரம்) அவர்கள் வழங்கினார். தொடர்ந்து, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் தலைமை உரையாற்றி, ரமலான் மாதத்தின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

பின்னர், நாட்டாமை ஜனாப் ஹாஜியார் முஹம்மது பாரூக் மற்றும் துணை நாட்டாமை ஜனாப் நவ்ஷாத் அலி அவர்கள் முன்னிலை உரைகள் வழங்கி நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



அதனைத் தொடர்ந்து, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பாக ஜனாப் முகமது யூனுஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, மௌலவி கே. முஹம்மத் சலீம் ரியாஜி அவர்கள் “ரமலானே வருக” என்ற தலைப்பில் சுமார் 40 நிமிடங்கள் பயனுள்ள சிறப்புரையாற்றினார். அவரது உரை, ரமலானை எவ்வாறு வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் பங்கேற்பாளர்களுக்கு தெளிவான வழிகாட்டுதலை வழங்கியது.

இந்த நிகழ்ச்சியில் ஆண்கள் மற்றும் பெண்கள் இணைந்து மொத்தம் 95 பேர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்ச்சியை சகோதரர் இன்ஜினியர் அணிஸ் அவர்கள் ஒழுங்காகவும் சிறப்பாகவும் வழிநடத்தினார். இறுதியாக ஜனாப் அனீஸ் அவர்கள் நன்றி உரையாற்ற, நிகழ்ச்சி இனிதே நிறைவுபெற்றது.

அல்லாஹ் இந்த பயனுள்ள நிகழ்ச்சியை ஏற்றுக்கொண்டு, இதில் கேட்ட நற்செய்திகளை நம் வாழ்வில் நடைமுறைப்படுத்த எல்லோருக்கும் தௌஃபீக் அருள்வானாக.

## “ரமலானே வருக” – திருநாகேஸ்வரம் R.V. நகர் பகுதியில் சிறப்பு நிகழ்ச்சி...




12.02.2026 வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – கும்பகோணம் கிளை, திருநாகேஸ்வரம் வட்டம் சார்பாக “ரமலானே வருக” என்ற தலைப்பில் சிறப்பு நிகழ்ச்சி திருநாகேஸ்வரம் R.V. நகர் பகுதியில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சி திருக்குர்ஆன் கிராஅத் மற்றும் அதன் தமிழாக்கத்துடன் தொடங்கியது. இதனை SIO மாணவர் H. Afdal அவர்கள் இனிமையாக ஓதி விளக்கினார். நிகழ்ச்சியை சகோதரர் சு. அப்துர் ரஹ்மான் அவர்கள் ஒழுங்காகவும் சீராகவும் வழிநடத்தினார்.

தொடர்ந்து, திருநாகேஸ்வரம் ஹாஜா மாலிக் அவர்கள் வரவேற்புரையாற்றி, ரமலானில் நாம் எடுக்க வேண்டிய பயிற்சிகள் குறித்து சுருக்கமாக விளக்கினார். பின்னர், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் தலைமை உரையாற்றி, ரமலான் மாதம் நம் வாழ்வில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களை



எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து, மாவட்ட அமைப்பாளர் ஜனாப் முகமது யூனுஸ் அவர்கள் துவக்க உரை வழங்கி நிகழ்ச்சியின் நோக்கத்தை விளக்கினார்.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, மௌலவி K. உஸ்மான் மிஸ்பாஹி (இமாம் இரயில்வே பள்ளிவாசல், கும்பகோணம்) அவர்கள் “ரமலானே வருக” என்ற தலைப்பில் மிகவும் பயனுள்ள சிறப்புரையாற்றினார். இறுதியாக, ஹாஜா மாலிக் அவர்கள் நன்றி உரையாற்ற, நிகழ்ச்சி இனிய முறையில் நிறைவுபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் ஆண்கள் மற்றும் பெண்கள் சேர்ந்து மொத்தம் 50 பேர் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## பத்திரிகையாளர் சந்திப்பு...




தமிழகத்தின் எதிர்கால வளர்ச்சியை முன்னிறுத்தி, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பு சார்பில் ‘மக்களின் தேர்தல் அறிக்கை’ அறிமுகப்படுத்தும் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலச் செயலாளர் ஜனாப் A. முஹம்மது காசிம் கலந்து கொண்டு அறிக்கையை வெளியிட்டார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தை ஒரு முன்மாதிரி மாநிலமாக மாற்றுவதற்காக ஏழு முக்கியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் அறிக்கையை முன்வைத்தார். அதில் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிர்வாகம், ஒழுக்கத்தில் சிறந்த தமிழ்நாடு, சமூக விழுமியங்களைப் பேணும் நற்பண்பு மிக்க மாநிலம், அனைவருக்கும் சமமான நீதி கிடைக்கும் நீதிசார் கட்டமைப்பு, அனைத்துப் பகுதிகளும் தங்கு தடையின்றி முன்னேற்றம் காணும் வளர்ச்சி, தூய்மையான மற்றும் சுகாதாரமான சூழலை உருவாக்கும் சுத்தம் போற்றும் தமிழ்நாடு, வெளிப்படையான மற்றும் நேர்மையான அரசுப் பணிகளை உறுதி செய்யும் ஊழல் இல்லாத நிர்வாகம், இளைஞர்களைச் சீரழிக்கும் போதைப் பொருட்களை முற்றிலும் ஒழிக்கும் போதை இல்லாத மாநிலம் ஆகிய அம்சங்கள் வலியுறுத்தப்பட்டன.




மேற்கண்ட அம்சங்களின் அடிப்படையில் தமிழகத்தின் அரசியல் மற்றும் சமூகக் கட்டமைப்பு அமைய வேண்டும் என அவர் தனது உரையில் வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களின்

பல்வேறு கேள்விகளுக்கும் அவர் விரிவான விளக்கங்களை அளித்தார். இந்நிகழ்வில் ஜமாஅத் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

## “ரமலானே வருக” – மேலக்காவேரி...

15.02.2026 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5:30 மணிக்கு, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை, மேலக்காவேரி வட்டம் சார்பாக “ரமலானே வருக” என்ற தலைப்பில் மேலக்காவேரி ஆரிப் சமுதாயக்கூடத்தில் சிறப்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.



நிகழ்ச்சி, இக்ரா டியூஷன் சென்டர் ஆசிரியை சகோதரி பாரிஷா அவர்கள் திருக்குர்ஆன் கிராஅத் ஓதலுடன் இனிதே துவங்கப்பட்டது. நிகழ்ச்சியை மேலக்காவேரி சகோதரி ரோஜாக்கனி அவர்கள் ஒழுங்காகவும் சிறப்பாகவும் வழிநடத்தினார். தொடர்ந்து, ஹாஜா மாலிக் அவர்கள் வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சியின் நோக்கத்தை எடுத்துரைத்தார். பின்னர் சகோதரர் முகமது யூனுஸ் அவர்கள் துவக்க உரை வழங்கினார். மேலக்காவேரி நாட்டாமை அபூபக்கர் அவர்கள் மற்றும் MISWA தலைவர் ஆசாத் அலி அவர்கள், KISWA செயலாளர் அப்துல் அஜீஸ் அவர்கள் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கி நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பற்றிய விளக்கவுரை வழங்கப்பட்டு, அதன் நோக்கங்கள், பணிகள் மற்றும் சமூகப் பங்களிப்புகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. பின்னர் மகரிப் தொழுகைக்காக இடைவேளை விடப்பட்டு, தொழுகைக்கு பிறகு நிகழ்ச்சி மீண்டும் தொடங்கப்பட்டது.

இக்ரா பள்ளி மாணவ, மாணவிகள் திருக்குர்ஆன் ஓதுதல், துஆக்கள் கூறுதல் போன்ற பயனுள்ள நிகழ்ச்சிகளை வழங்கினர். மேலும் மாணவிகளின் குழு நாடகம் இடம்பெற்று, பங்கேற்பாளர்களிடையே பெரும் பாராட்டைப் பெற்றது.

நிகழ்ச்சியின் இறுதியில் சிறப்பு பேச்சாளர் மௌலவி நாசர் புகாரி அவர்கள் உணர்வூட்டும் சிறப்புரையாற்றி, ரமலான் மாதத்தின் முக்கியத்துவத்தையும், நம் வாழ்வில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களையும் விளக்கினார். இறுதியாக சகோதரி ரெஜினா அவர்கள் நன்றி உரையாற்ற, நிகழ்ச்சி இரவு 8:00 மணிக்கு இனிதே நிறைவுபெற்றது.



இந்த நிகழ்ச்சியில் 300-க்கும் மேற்பட்டோர், ஆண்கள் மற்றும் பெண்கள் இணைந்து ஆர்வமுடன் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். அல்லாஹ் இந்த பயனுள்ள நிகழ்ச்சியை

ஏற்றுக்கொண்டு, இதில் கேட்ட நற்செய்திகளை நம் வாழ்வில் நடைமுறைப்படுத்த எல்லோருக்கும் தௌஃபீக் அருள்வானாக. ஆமீன்.

## IRW TN தன்னார்வலர்கள் ஒரு நாள் பயிற்சி முகாம்...



*15.02.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை, IRW TN தன்னார்வலர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் சேலம் மாவட்டம் ஏற்காடு பள்ளிவாசலில் சிறப்பாக நடைபெற்றது.*

*நிகழ்ச்சி காலை trekking (நடைப்பயிற்சி) மூலம் துவங்கி, அதன் பின்னர் பள்ளிவாசலில் சகோதரர் குத்புதீன் அவர்கள் Dynamic Stretch உடற்பயிற்சி முறைகளை கற்றுக்கொடுத்தார். தொடர்ந்து தேநீருடன் தர்பியா நிகழ்ச்சி ஆரம்பமானது.*

*இந்நிகழ்ச்சியில் பள்ளிவாசல் இமாம் மௌலானா சையத் மசூத் அவர்கள் திருக்குர்ஆன் கிராஅத் ஓதி நிகழ்வை தொடங்கிவைத்தார். தேனி மாவட்டத்தை சேர்ந்த சகோதரர் கனி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். IRW TN மாநில தலைவர் அசாருதீன் அவர்கள் தலைமையேற்று நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தி நடத்தினார். மாநில செயலாளர் முஹம்மது ஆரிப் அவர்கள் IRW TN அமைப்பின் நோக்கங்கள், உடல் மற்றும் ஆன்மீக பயிற்சிகளின் முக்கியத்துவம், மேலும் IRW 20-12 தர்பியாவின் அவசியம் குறித்து விளக்கமளித்தார்.*

*அதனைத் தொடர்ந்து, தன்னார்வலர்கள் குழுக்களாகப் பிரிந்து அவசரகால மீட்பு மற்றும் நிவாரணப் பயிற்சிகளில் ஈடுபட்டனர். இதில் First Aid, CPR, காயமடைந்தவர்களை மாற்றும் முறைகள் (Shifting methods), பல்வேறு வகை கட்டுப்பட்டைகள் (Bandages), பலவிதமான முடிச்சுகள் (Knots), மற்றும் Last Aid (Janaza Ablution) போன்ற பயிற்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.*

*நிகழ்ச்சியின் இறுதியில் சாலிடாரிடி மாநில செயலாளர் சகோதரர் சேலம் ஜாஃபர் சாதிக் அவர்கள் நிறைவுரையாற்றினார். இப்பயிற்சி முகாமில் சுமார் 25 தன்னார்வலர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். மாலை 4.30 மணிக்கு நிகழ்ச்சி நிறைவடைந்து, அனைவரும் தங்கள் இல்லங்களுக்கு திரும்பிச் சென்றனர்.*

## மக்களின் தேர்தல் அறிக்கை வெளியீடு...




*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளை சார்பாக 2026 சட்டமன்ற மாநில தேர்தலை முன்னிட்டு “மக்களின் தேர்தல் அறிக்கை” 11.02.2026 புதன்கிழமை மதியம் 1.00 மணியளவில் வெளியிடப்பட்டது. நகர தலைவர் ஜனாப் சிபகத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்த*



நிகழ்ச்சியில், ஜமாஅத் ஊழியர் ஜனாப் இப்ராஹிம் வரவேற்புரை நிகழ்த்தினார். மண்டல அமைப்பாளர் ஜனாப் அப்துல் ஹமீத் மற்றும் நகர மகளிர் அணி அமைப்பாளர் சகோதரி தாசின் நிஷாத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில செயலாளர் ஜனாப் முஹம்மது காசிம் அவர்கள் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு அதன் நோக்கங்களை விளக்கினார். குறிப்பாக மதுவுக்கு எதிராக ஜமாஅத் நீண்ட காலமாக மேற்கொண்டு வரும் விழிப்புணர்வு பணிகள், சமூகத்தில் அதிகரித்து வரும் போதைப் பொருள் கலாச்சாரம், பாலியல் தொடர்பான பிரச்சினைகள், சமூக நல்லிணக்கத்தின் அவசியம், கல்வி முறை மாற்றத்தின் தேவை போன்ற முக்கிய அம்சங்களை அவர் வலியுறுத்தினார். மேலும், ஜமாஅத் முன்வைத்த காலை உணவு திட்டத்தை தமிழக அரசு நடைமுறைப்படுத்தியதையும் எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் அவர் விரிவான விளக்கங்களை வழங்கினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 20-க்கும் மேற்பட்ட ஊடக நிருபர்களுக்கு மக்களின் தேர்தல் அறிக்கை வழங்கப்பட்டது. இறுதியாக ஜமாஅத் ஊழியர் ஜனாப் அஸ்ரப் அலி அவர்கள் நன்றி உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியை ஜமாஅத் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## “ரமலானே வருக” இஜ்திமா கோட்டை ஷாஹி மஸ்ஜிதில் நடைபெற்றது...



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளை சார்பாக “ரமலானே வருக” இஜ்திமா 14.02.2026 சனிக்கிழமை மக்ரிப் தொழுகை முதல் இஷா தொழுகை வரை கோட்டை ஷாஹி மஸ்ஜிதில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சி துவக்கமாக, ஷாஹி மஸ்ஜித் இமாம் ஹாபிஸ் முஹம்மத் பைரோஸ் காஷிமி அவர்கள் திருக்குர்ஆன் வசனங்களை ஓதினார். தொடர்ந்து, ஜனசேவா வங்கி சேர்மன் ஜனாப் அதிக்குர் ரஹ்மான் அவர்கள் சிறப்புரையாற்றி, ரமலானில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள், வணக்க வழிபாடுகள் மற்றும் அவற்றின் செயல்திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.



இந்த இஜ்திமாவில் 75-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். இறுதியாக

ராபிததுல் உலாமா தலைவர் மௌலவி இஸ்மாயில் ஃபலாஹி அவர்கள் துவா நடத்தி நிகழ்ச்சியை இனிதே நிறைவு செய்தார்.

## பத்திரிக்கையாளர் சந்திப்பு - மக்களின் தேர்தல் அறிக்கை...




*16.02.2026 (திங்கள்கிழமை) பகல் 12.00 மணிக்கு, கும்பகோணம் சத்தியச்சோலை அரங்கில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பாக "மக்களின் தேர்தல் அறிக்கை – 2026" அறிமுகப்படுத்தும் வகையில் பத்திரிக்கையாளர் சந்திப்பு நடைபெற்றது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த சந்திப்பில், தமிழகத்தின் அடிப்படை தேவைகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த தேர்தல் அறிக்கை அறிமுகப்படுத்தப்பட்டது.*

*அறிக்கையின் முக்கிய அம்சங்களாக ஒழுக்கத்தில் சிறந்த தமிழ்நாடு, நீதியில் சிறந்த தமிழ்நாடு, சமச்சீரான வளர்ச்சியை நோக்கிய தமிழ்நாடு, சுத்தம் மற்றும் சுகாதாரம் போற்றும் தமிழ்நாடு, ஊழல் இல்லாத தமிழ்நாடு, மது மற்றும் போதை இல்லா தமிழ்நாடு, மக்கள் நல அரசு, கல்வி மற்றும் வேளாண்மை ஆகியவை வலியுறுத்தப்பட்டன. இந்த அறிக்கை முஸ்லிம்கள் தொடர்பான பிரச்சினைகளுக்காக மட்டும் அல்லாமல், தமிழக மக்களின் பொது பிரச்சினைகள், அவர்களின் எண்ணங்கள் மற்றும் தேவைகளை மாநிலம் முழுவதும் பல தரப்பு மக்களிடம் ஆய்வு செய்து உருவாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.*

*இந்த சந்திப்பில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாவட்ட பொறுப்பாளர் சகோதரர் முகமது யூனுஸ் அவர்கள் தேர்தல் அறிக்கையின் பிரதிகளை ஊடகவியாளர்களுக்கு வழங்கி, அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு தெளிவான விளக்கங்களை அளித்தார். மேலும், மாநகர தலைவி சகோதரி ஹசீனா யூசுப், ஜமாஅத்தின் மூத்த உறுப்பினர்கள், ஆண் மற்றும் பெண் உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு ஊடகங்களைச் சேர்ந்த செய்தியாளர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.*

*இந்த மக்கள் தேர்தல் அறிக்கை தமிழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டும் ஆவணமாக அமையும் என்ற நம்பிக்கை இந்த சந்திப்பில் வெளிப்படுத்தப்பட்டது.*

## ரமளானே வருக சிறப்பு நிகழ்ச்சி பெரம்பூர் ஐஐசி அரங்கத்தில் நடைபெற்றது.

*மாநிலச் செயலாளர் கே ஜலாலுத்தீன் குர்ஆனிய சமூகத்தைக் கட்டமைப்போம் எனும் தலைப்பில் கருத்துரை நல்கினார். குர்ஆனுடனான தொடர்பின் ஐந்து பரிமாணங்களை அவர் விளக்கினார்.*



குர்ஆனை ஓதுவதும், அதனைப் புரிந்து கொள்வதும் குர்ஆனின் படிச் செயல்படுவதும் குர்ஆனின் செய்தியை மக்களுக்கு எடுத்துரைப்பதும் செயல் சான்று வழங்குவதும் வாழ்நாள் முழுவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை என்று அவர் ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.


மாற்றத்துக்கான மாதம்தான் ரமளான் என்கிற தலைப்பில் மாநில மகளிர் அணிச் செயலாளர் ஃபாத்திமா ஜலால் பேசினார். ரமளான் மாதம் நம்முடைய எண்ணத்தில், உணர்வில், சொல்லில், செயலில் ஒட்டுமொத்த வாழ்வில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்காகவே வந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

குர்ஆன்காரர்கள் என்றுமே தோற்றது கிடையாது. வெற்றியின் பக்கம் இட்டுச் செல்வதற்காகத்தான் குர்ஆன் வந்தது. குர்ஆனாகவே வாழ்வதுதான் மிகப் பெரும் அருள்வளம் என்று பெரம்பூர் கிளைத்தலைவர் டி அஜீஸ் லுத்ஃபுல்லாஹ் குறிப்பிட்டார்.

## வக்பு சொத்துக்களை உம்மீத் போர்ட்டலில் பதிவேற்றம்...




வக்பு சொத்துக்களை உம்மீத் போர்ட்டலில் பதிவேற்றம் செய்வது குறித்த ஆய்வுக்கூட்டம் சென்னையில் 15.02.26 அன்று நடைபெற்றது. வக்ஃபு வாரிய தலைவர் நவாஸ் கனி எம்பி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சமுதாய தலைவர்கள் கலந்து கொண்டார்கள். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் மாநில செயலாளர் SN.சிக்கந்தர் சென்னை மெட்ரோ தலைவர் நசீர் அத்தாவுல்லாஹ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




மாநில செயலாளர் SN. சிக்கந்தர் வக்பு சொத்துக்களை ஆவண படுத்துவது பற்றியும் அதனை பயன்பாட்டுக்கு கொண்டு வருவதைப் பற்றியும் எடுத்துக் கூறினார். களப்பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

## ஐந்து தளங்களில் தஸ்கியா!

பெரம்பூர் கிளையின் ரமளான் திட்டம்..! ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பெரம்பூர் கிளை ரமளானை முன்னிட்டு ஐந்து அம்சத் திட்டம் வகுத்திருக்கின்றது. முதலாவதாக, உறுப்பினர்கள், ஊழியர்கள் அனைவரும் அத்தியாயம் அல்கஸஸை ஆழ்ந்து ஓதுவார்கள். இதன் பொருளை உணர்ந்து கொள்ள முயல்வார்கள்.

இரண்டாவதாக, நாள்தோறும் தராவீஹ் தொழுகைக்குப் பிறகு ஜமாஅத் அரங்கத்தில் திருக்குர்ஆன் விரிவுரை நிகழ்வும் நடத்தப்படும். இதில் மாநிலச் செயலாளர்




கே ஜலாலுத்தீன் அவர்கள் திருக்குர்ஆன் விரிவுரை வழங்க இருக்கின்றார்கள். இந்த நிகழ்வு முகநூலில் நேரலையாகவும் ஒளிப்பரப்பப்பட இருக்கின்றது என்பது தித்திக்கும் செய்தி.

மூன்றாவதாக வாரம்தோறும் இஃப்தார் விருந்து நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டின் முதல் இஃப்தார் நிகழ்வில் மாநிலச் செயலாளர் எஸ் என் சிக்கந்தர் பேசுகின்றார். இதே போன்று மகளிருக்கு, இளைஞர்களுக்கு, சகோதர, சமுதாயச் சொந்தங்களுக்கு என தனித்தனி இஃப்தார் நிகழ்வுகளும் நடத்தப்பட இருக்கின்றன. ஊழியர்களின் இல்லங்களிலும் இஃப்தார் நிகழ்வுகள் நடத்தப்பட இருக்கின்றன.

நான்காவதாக, குர்ஆன் அருளப்பட்ட இந்த அருள் நிறை மாதத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் ஊழியரும் குறைந்தபட்சம் மூன்று பேருக்கேனும் குர்ஆன் பிரதிகளை வழங்குவார்கள். இவ்வாறாக 100 குர்ஆன் பிரதிகளை விநியோகம் செய்கின்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

ஐந்தாவதாக, ஒற்றைப் படை இரவுகளில் குர்ஆன் கூட்டாய்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட இருக்கின்றன. மேலும் இன்ஃபாக் தினம், ஜகாத் சேகரிப்பு, ஈகைப் பெருநாள் சந்திப்பு அழைப்பு, இல்லங்களில் அழைப்புப் பணி என வெவ்வேறு களங்களில் பணிகள் மும்முரமாக நடத்தப்பட இருக்கின்றன. இது பெரம்பூர் ஊழியர்கள் மத்தியில் மிகப் பெரும் எழுச்சியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றது.

## வெல்லும் சிறுபான்மையினரின் உரிமை குரல் A Voice For Minority Rights கலந்துரையாடல் நிகழ்வு.

"வெல்லும் சிறுபான்மையினரின் உரிமை குரல் – *A Voice For Minority Rights*" என்ற தலைப்பில், திமுக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமை தாங்கினார்.



நிகழ்வில் திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் கலந்து கொண்டு, சிறுபான்மையினரின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை கேட்டறிந்தனர். இக்கூட்டத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழக துணைத்தலைவர் ஐ. ஜலாலுதீன், மாநில செயலாளர் S.N. சிக்கந்தர், கோவை பெருநகரத் தலைவர் உமர் பாரூக், சென்னை மெட்ரோ செயலாளர்

அஷ்ரப் அலி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் ஜமாஅத் சார்பாக "மக்களின் தேர்தல் அறிக்கை" கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களிடம் வழங்கப்பட்டது. மேலும், மக்கள் நல அரசு கவனிக்க வேண்டிய முக்கிய பிரச்சினைகள்



குறித்து மாநில செயலாளர் S.N. சிக்கந்தர் அவர்கள் விரிவாக விளக்கி உரையாற்றினார்.

## GIO மாணவிகளின் "Special Visit" – திருப்பூர் காது கேளாதோர் பள்ளியில் சேவை நிகழ்வு...

15.02.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு, GIO மாணவிகளின் Special Visit செயல் திட்டத்தின் அடிப்படையில் திருப்பூரில் உள்ள காது கேளாதோர் பள்ளிக்கு பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் சுமார் ரூ. 5300 மதிப்பிலான மளிகைப் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.




இந்த பள்ளியில் பயிலும் சுமார் 37 மாணவ, மாணவிகளுடன் GIO மாணவிகள் 6 பேர் கலந்து கொண்டு, அவர்களுக்கு புரியும் வகையில் செய்கைகளின் மூலம் உரையாடி மகிழ்வூட்டினர்.

இந்த நிகழ்வில் GIO கண்காணிப்பாளர் சகோதரி சம்சியா பானு, மக்கள் தொடர்பு செயலாளர் சகோதரர் அப்துல் ரஷீது மற்றும் பெரிய கடைவீதி ஊழியர் சகோதரர் தமீம் சாதிக் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

## இப்தார் நிகழ்ச்சி கும்பகோணம்...

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கோணம் கிளை தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் நிகழ்ச்சியை துவக்கி வைத்து, நோன்பின் மூலம் உருவாகும் சமூக ஒற்றுமை, மனித நேயம் மற்றும் இறைநெருக்கம் குறித்த சிந்தனைகளை எடுத்துரைத்தார்.



மேலும், நாகர்கோவிலில் இருந்து வருகை தந்த மௌலவி நூஹ் மஹ்ழரி அவர்கள் மிகவும் பயனுள்ள சிறப்புரையாற்றி, ரமலானின் ஆன்மீகப் பயன்கள் குறித்து விளக்கினார். அதனைத் தொடர்ந்து துஆவுடன் நோன்பு திறக்கும் (இப்தார்) நிகழ்ச்சி அமைதியான முறையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சி அனைத்து ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்களின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்புடன், இறைவனின் அருளால் சிறப்பாக நிறைவு பெற்றது. அல்லாஹ்

இந்த நிகழ்ச்சியை ஏற்றுக்கொண்டு, இதுபோன்ற நன்மையான முயற்சிகள் சமுதாய நலனுக்காக தொடர்ந்து நடைபெற தௌஃபீக் அருள்வானாக.

## இஸ்லாத்தை தெரிந்து கொள்வோம் SIO கும்பகோணம்...




கும்பகோணம் | 22.02.2026 (ஞாயிற்றுக்கிழமை) மாணவர் இஸ்லாமிய அமைப்பு (SIO) சார்பாக, சகோதர சமூக இளைஞர்களுக்கான மாபெரும் இப்தார் நிகழ்ச்சி மாலை 5:30 மணிக்கு கும்பகோணம் நைல் நகர் பள்ளிவாசலில் சிறப்பாக நடைபெற்றது. “இஸ்லாத்தை தெரிந்து கொள்வோம்” என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், பங்கேற்ற மாணவர்களுக்கு இஸ்லாத்தின் அடிப்படை கருத்துகள், நம்பிக்கைகள் மற்றும் வாழ்க்கை முறைகள் குறித்து காட்சி அரங்குகள் (Exhibition) மூலம் விளக்கங்கள் அளிக்கப்பட்டன. இவ்வரங்குகளில் SIO மாணவர்கள் நேரடியாக விளக்கம் அளித்து, சகோதர சமூக மாணவர்களின் சந்தேகங்களுக்கு தெளிவான பதில்களை வழங்கினர்.

மாலை 6:30 மணிக்கு நோன்பு திறக்கும் (இப்தார்) நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் தொழுகை நடத்தப்பட்டதில், சகோதர சமூக மாணவர்கள் முஸ்லிம்கள் தொழும் முறையை நேரில் காணும் வாய்ப்பு பெற்றனர். அதனைத் தொடர்ந்து “இஸ்லாத்தை தெரிந்து கொள்வோம்” என்ற தலைப்பில் முக்கிய அரங்கு நிகழ்ச்சி நடைபெற்றது. இது SIO மாவட்ட பொறுப்பாளர் சகோதரர் அஸ்ஸலாம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை சகோதரர் அஹமது தஸ்லீம் அவர்கள் சிறப்பாக வழிநடத்தினார்.



இந்த நிகழ்ச்சியில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் முன்னிலையாக இருந்து வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து மண்டல பொறுப்பாளர் ஜனாப் முகமது யூனுஸ் அவர்கள் “இஸ்லாத்தை தெரிந்து கொள்வோம்” என்ற தலைப்பில் விளக்கமான சிறப்புரையாற்றினார். பின்னர் மாணவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் விரிவான பதில்கள் அளிக்கப்பட்டன.

நிகழ்ச்சியின் இறுதியாக SIO கும்பகோணம் பொறுப்பாளர் நன்றி உரையாற்ற, நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. இந்நிகழ்ச்சியில் சுமார் 300-க்கும் மேற்பட்ட சகோதர சமூக மாணவர்கள் கலந்து கொண்டு இஸ்லாத்தை நேரடியாக அறிந்து கொண்டனர். கடந்த ஐந்து நாட்களாக SIO மாணவர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் பணியாற்றி, டிஜிட்டல் மீடியா விளம்பரங்கள் மூலம் பலரை ஒருங்கிணைத்திருந்தனர். கலந்து கொண்ட அனைவருக்கும் ரிட்டன் கிப்ட் மற்றும் இரவு உணவு வழங்கப்பட்டது.

பங்கேற்ற மாணவர்கள் அனைவரும் நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக தங்கள் நன்றியையும் கருத்துக்களையும் தெரிவித்ததுடன், இதுபோன்ற நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்துமாறு கேட்டுக்கொண்டனர்.

## நோன்பு துறக்கும் நிகழ்ச்சி...



நன்மைகள் பூத்துக் குலுங்கும் ரமலான் மாதத்தை முன்னிட்டு, நாம் செய்யும் ஒவ்வொரு நற்செயலுக்கும் இறைவன் பல மடங்கு நன்மைகள் அளிப்பான் என்ற எண்ணத்தின் அடிப்படையில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பல்வேறு நிகழ்ச்சிகளை திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, 23.02.2026 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மன்னார்குடி கமாலியா தெருவில், சகோதர சமுதாயத்தினருடன் இணைந்து நோன்பு திறக்கும் (இப்தார்) நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சி “நோன்பு துறக்கவும் – மனம் திறக்கவும்” என்ற கருத்தை மையமாகக் கொண்டு, ரமலான் என்றால் என்ன? எதற்காக நோன்பு நோற்கிறோம்? போன்ற கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் ஜமாஅத் ஊழியர்களும் உறுப்பினர்களும், தெருவாசிகளுடன் இணைந்து சகோதரத்துவத்தை வெளிப்படுத்தினர்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தஞ்சையைச் சேர்ந்த சாலிடாரிட்டி மாநில தலைவர் ரியாஸ் அஹமத் அவர்கள் கலந்து கொண்டு, நோன்பின் முக்கியத்துவம், அதன் ஆன்மீக நன்மைகள் மற்றும் மனித நேயத்தை வளர்க்கும் அதன் தாக்கம் குறித்து எளிமையாகவும் விளக்கமாகவும் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் 80-க்கும் மேற்பட்ட சகோதர சமுதாயத்தினர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## பத்திரிக்கையாளர்கள் ஊடகவியாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கான இப்தார் நிகழ்ச்சி...

கும்பகோணம் அனஸ் ரெஸ்டாரண்டில் நடைபெற்ற பத்திரிக்கையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான இப்தார் நோன்பு திறப்பு சிறப்பு நிகழ்ச்சி இறைவனுடைய அருளால் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பத்திரிக்கை சங்கத் தலைவர் திரு. ராமச்சந்திரன், மருத்துவர் நியாமத்துல்லா மற்றும் ஐக்கிய ஜமாத் ஒருங்கிணைப்பாளர் ஜனாப் ஜாகிர் உசேன் ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர்.




ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் தலைமை தாங்கிய இந்த

நிகழ்ச்சியை, மாவட்ட அமைப்பாளர் ஜனாப் முகமது யூனுஸ் அவர்கள் சிறப்பாக வழிநடத்தினார். தொடர்ந்து சென்னையில் இருந்து வருகை தந்த வி. எஸ். அமீன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

தமது உரையில் அவர், உண்மையான செய்திகளை மட்டுமே வெளியிட வேண்டியது, உரிமைகள் மறைக்கப்படாமல் இருக்க ஊடகங்கள் விழிப்புடன் செயல்பட வேண்டியது, ஊடகவியலாளர்கள் சமூகத்தில் ஒற்றுமையை வளர்க்கும் பாலமாக இருக்க வேண்டியது, மேலும் சமூக நல்லிணக்கம் மற்றும் நீதியை முன்னிறுத்தும் செய்தி பண்பாட்டை உருவாக்க வேண்டியது ஆகிய முக்கிய அம்சங்களை வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் சுமார் 50-க்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்கள் மற்றும் ஜமாஅத் உறுப்பினர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இறுதியாக இறைவனின் உதவியுடன் இப்தார் சிறப்பு நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## வழக்கறிஞர்களுக்கான இப்தார் நோன்பு துறப்பு நிகழ்ச்சி...




கும்பகோணம், மார்ச் 4 – ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை சார்பில் வழக்கறிஞர்களுக்கான இப்தார் நோன்பு துறப்பு நிகழ்ச்சி கும்பகோணம் அனஸ் ரெஸ்டாரன்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியை ஜனாப் முஹம்மது யூனுஸ் அவர்கள் வழிநடத்தினார். ஆரம்பமாக வழக்கறிஞர் ஜனாப் முகமது ரியாசுதீன் அவர்கள் திருக்குர்ஆன் ஓதி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். வழக்கறிஞர்கள் அப்துல் சுபஹான் மற்றும் சம்சுதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் வரவேற்புரை வழங்கி, ரமலானின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். கும்பகோணம் வழக்கறிஞர் சங்கத் தலைவர் எம். ராஜசேகர் மற்றும் வழக்கறிஞர் ரஜினி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



தொடர்ந்து, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு மாநில செயலாளர் பேராசிரியர் முனைவர் A. ஹஜ் முகைதீன் அவர்கள் சிறப்புரையாற்றி, ரமலானின் ஆன்மிகப் பயன்கள் மற்றும் சமூக ஒற்றுமையின் அவசியத்தை விளக்கினார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கேள்வி–பதில் நிகழ்ச்சியில் பல்வேறு வழக்கறிஞர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்கள் கேள்விகளை முன்வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் 80-க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டு இப்தார் நோன்பு துறந்தனர். இறுதியாக சு. அப்துர் ரஹ்மான் அவர்கள் நன்றி உரையாற்ற, நிகழ்ச்சி இனிதே நிறைவுபெற்றது.

## சமூக மத நல்லிணக்க இப்தார் நிகழ்ச்சி – தஞ்சாவூர்...

*05.03.2026 அன்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தஞ்சாவூர் கிளை சார்பாக, ஞானம் மெட்ரிகுலேஷன் பள்ளியில் ரோட்டரி கிளப்புடன் இணைந்து சமூக மத நல்லிணக்க இப்தார் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.*

*நிகழ்ச்சி ஆலிமா சலீமா அவர்கள் திருக்குர்ஆன் கிராஅத் ஓதலுடன் தொடங்கியது. தொடர்ந்து, திருச்சி மண்டல அமைப்பாளர் முகமது செய்யது அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பின்னர் திருச்சி அஸ்ஸலாமு கல்லூரி இயக்குனர் அமானுல்லா அவர்கள் ரமலான் மாதத்தின் முக்கியத்துவம் குறித்து விரிவாக சிறப்புரையாற்றினார்.*

*வாழ்த்துரையாக ஞானம் மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குனர் பழனியப்பன், திருவருட் பேரவை தியாகராஜன் மற்றும் ரோட்டரி கிளப் தலைவர் ஆகியோர் உரையாற்றி நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.*

*இந்நிகழ்ச்சியில் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் உட்பட மொத்தம் 230 பேர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை மகிழ்ச்சியுடன் அனுபவித்தனர். பங்கேற்றவர்களுக்கு குர்ஆனில் “ஓ மனிதர்களே” என தொடங்கும் 16 வசனங்களின் தமிழ் விளக்கத்துடன் கூடிய பிரதி வழங்கப்பட்டது. நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றதாக பங்கேற்பாளர்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்து பாராட்டுத் தெரிவித்தனர்.*



## ஊழியர்கள் குடும்ப இப்தார் நிகழ்ச்சி – சங்கராபுரம்

*ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சங்கராபுரம் சார்பாக 05.03.2026 அன்று ஊழியர்கள் குடும்ப இப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மண்டல அமைப்பாளர் ஜனாப் அப்துல் ஹமீத் அவர்கள் “நோன்பின் நோக்கங்களும் இஸ்லாத்தில் குடும்ப அமைப்பின் முக்கியத்துவமும்” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் சுமார் 70 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.*

## ரிஃபா நெட்வொர்க் மீட்டிங் & இப்தார் நிகழ்ச்சி – கும்பகோணம்...

*கும்பகோணம், 07.03.2026: RIFA Chamber of Commerce & Industry – சக்சஸ் சாப்டர் சார்பில் ரமலான் சிறப்பு ரிஃபா நெட்வொர்க் மீட்டிங் மற்றும் இப்தார் நிகழ்ச்சி கும்பகோணம் லீபென்ஸ் ஹோட்டலில் சிறப்பாக நடைபெற்றது.*




*இந்த நிகழ்ச்சிக்கு ரிஃபா தமிழ்நாடு மாநிலத் தலைவர் ஜனாப் முல்லா யூனுஸ் சேட் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உறுப்பினர்களை சந்தித்து வழிகாட்டும் உரையாற்றினார்.*

நிகழ்ச்சி அஸர் தொழுகையுடன் துவங்கி, தொடர்ந்து நெட்வொர்க் மீட்டிங் நடைபெற்றது. இதில் ரிஃபா உறுப்பினர்கள் தங்கள் தொழில் தொடர்பான அறிமுகங்களை வழங்கி, ஒருவருக்கொருவர் வணிக வாய்ப்புகளை பகிர்ந்து கொண்டனர். மாலை மகரிப் தொழுகையை தொடர்ந்து இப்தார் (நோன்பு துறப்பு) நிகழ்ச்சியும் நடைபெற்றது. இதில் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டு ரமலான் மாதத்தின் ஆன்மிகத்தையும் தொழில் வளர்ச்சிக்கும் இடையிலான முக்கியத்துவத்தையும் பகிர்ந்து கொண்டனர்.




இந்த நிகழ்ச்சி மூலம் உறுப்பினர்களுக்கிடையே நெட்வொர்க்கிங், வணிக ஒத்துழைப்பு மற்றும் சகோதரத்துவம் மேலும் வலுப்பெற்றது.

## இஃப்தார் நிகழ்ச்சி – புதுக்கோட்டை வட்டம்...



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் புதுக்கோட்டை வட்டத்தில் 07.03.2026 அன்று இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சி GIO மாணவி சகோதரி அஃப்ரா அவர்கள் திருக்குர்ஆன் கிராஅத் ஓதலுடன் தொடங்கியது. நிகழ்ச்சியை புதுக்கோட்டை வட்ட பொறுப்பாளர் நாஸிமா சஜலி அவர்கள் சிறப்பாக வழிநடத்தினார். தொடர்ந்து “ரமலானின் நோக்கம்” என்ற தலைப்பில் ஆலிமா சலிமா பேகம் அவர்கள் பயனுள்ள சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் சுமார் 120 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



## இஃப்தார் நிகழ்வு – உடுமலை மகளிரணி...

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உடுமலை கிளை மகளிரணி சார்பாக 07.03.2026 அன்று தென்னை மரத்து ஜமாஅத் அலுவலகத்தில் இஃப்தார் நிகழ்வு நடைபெற்றது.



நிகழ்வில் உடுமலை கிளை பொறுப்பாளர் மெஹராஜ் அவர்கள் “நோன்பின் ஒழுக்க கட்டுப்பாடு” என்ற தலைப்பில் பயனுள்ள உரையாற்றினார். மேலும் பெண்கள் தங்களது திறனுக்குட்பட்டவாறு நோன்பு திறப்பிற்கான உணவு பொருட்களை ஆர்வத்துடன் கொண்டு வந்து பங்கெடுத்தனர். இந்த நிகழ்ச்சியில் 60 பெண்கள் மற்றும் குழந்தைகள் கலந்து கொண்டு நிகழ்வை

சிறப்பித்தனர். ஜமாஅத் ஊழியர்களும் கலந்து கொண்டு நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

## மருத்துவர்களுக்கான இப்தார் நிகழ்ச்சி...

கும்பகோணம் சத்தியச்சோலை உள் அரங்கத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் – கும்பகோணம் கிளை சார்பில் மருத்துவர்களுக்கான இப்தார் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.




இந்த நிகழ்ச்சிக்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கும்பகோணம் கிளை தலைவர் ஜனாப் அப்துல் கலாம் ஆசாத் அவர்கள் தலைமையேற்றார். நிகழ்ச்சியை சகோதரர் இன்ஜினியர் அப்துல் ரஹ்மான் அவர்கள் ஒழுங்காக வழிநடத்தினார். நிகழ்ச்சி திருக்குர்ஆன் கிராஅத் மூலம் துவங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாவட்ட அமைப்பாளர் ஜனாப் முகமது யூனுஸ் அவர்கள் சத்தியச்சோலை பற்றிய அறிமுக உரையை வழங்கினார். பின்னர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி மாநில தலைவர் மௌலவி M.A. முஹம்மது ஹனீஃபா மன்பயீ அவர்கள் சிறப்புரையாற்றி, ரமலானின் ஆன்மீகப் பயன்கள், சமூக நல்லிணக்கம் மற்றும் மனிதநேய சேவையின் முக்கியத்துவம் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து பங்கேற்பாளர்களுடன் கேள்வி–பதில் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 2 பெண் மருத்துவர்களும், 8 ஆண் மருத்துவர்களும் கலந்து கொண்டனர். மேலும் ஜமாஅத் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட சுமார் 40 பேர் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

இறுதியாக ரியாசுதீன் அவர்கள் நன்றியுரை வழங்க, அனைவரும் இணைந்து நோன்பு திறக்கும் (இப்தார்) நிகழ்ச்சி நடைபெற்றது. இறைவனின் அருளால் இந்த இப்தார் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## மாற்றத்தை ஏற்படுத்தும் நோன்பு துறக்கும் நிகழ்ச்சி...

08.03.2026 ஞாயிற்றுக்கிழமை மன்னார்குடி VOC சாலையில் உள்ள Meeting Point Restaurant-ல் நடைபெற்ற இப்தார் விருந்தில் நான் முதன்முறையாக கலந்து கொண்டேன். என் 1992-ம் ஆண்டு பேட்ச் மாணவர்கள் அப்துல் ரஹ்மான் மற்றும் மன்சூர் அழைத்திருந்தனர். சுமார் 50 பேருக்கான ஏற்பாடுகளுடன் சுத்தமாகவும் அழகாகவும் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த இடத்தில், பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்று கூடினர்.



இப்தார் என்பது ரமலான் மாதத்தில் முஸ்லிம்கள் பகல் முழுவதும் நோன்பு நோற்று, மாலை சூரியன் மறைந்ததும்

மக்ரிப் தொழுகை நேரத்தில் உணவருந்தி நோன்பை முடிக்கும் நிகழ்வு என்பதை அங்கு நேரடியாக அனுபவித்தேன். Fruit salad, juice, பின்னர் நோன்புக்கஞ்சி வழங்கப்பட்டன. அதன்பின் அனைவரும் இணைந்து இப்தார் செய்து, தொழுகை நிறைவேற்றினர். நிகழ்ச்சியில் இந்துக்கள், கத்தோலிக்கர், புரட்டஸ்டண்ட் நண்பர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். குறிப்பாக St. Joseph's பள்ளி அருட்சகோதரிகள் மற்றும் ஆசிரியர்களுடன் பழைய நினைவுகளை பகிர்ந்துகொண்டது மகிழ்ச்சியளித்தது. மேலும், "Green Needa" அமைப்பின் நிறுவனர் ராஜவேல் அவர்கள் போன்ற சமூகப் பணியாளர்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

பின்னர் நடைபெற்ற அரங்கில் ஆன்மீகம் மற்றும் சமூக நல்லிணக்கம் குறித்து அருட்சகோதரி உரையாற்றினார். அதன் பின் என்னையும் பேச அழைத்தபோது, நான் ஆசிரியராக இருந்த காலத்தின் அனுபவத்தை பகிர்ந்து, பண்டிகைகள் மூலம் மனிதர்களை இணைக்கும் பண்பின் முக்கியத்துவத்தை சுவாரஸ்யமாக எடுத்துரைத்தேன்.

இறுதியில் Dr. ஹஜ் மைதீன் அவர்கள் சிறப்புரையாற்றியதன் பின், buffet முறையில் விருந்து வழங்கப்பட்டது. கோழி பிரியாணி உள்ளிட்ட உணவுகளை அளவோடு சுவைத்து, மனநிறைவுடன் அந்த நாள் முடிந்தது.

இந்த இப்தார் அனுபவம், மதங்களைத் தாண்டிய மனித நேயத்தையும், ஒன்றிணையும் பண்பையும் நேரில் உணர வைத்த ஒரு மறக்கமுடியாத அனுபவமாக அமைந்தது.

## சமூகங்கள் கொண்டாடும் இஃப்தார் நிகழ்ச்சிகள்...




ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) நீடாமங்கலம் வட்டத்தின் சார்பாக சமூக நல்லிணக்க நோன்பு துறப்பு (இஃப்தார்) நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வை நீடாமங்கலம் JIH பொறுப்பாளர் சகோதரர் சர்புதீன் மற்றும் ஜமாஅத் உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் மன்னார்குடி JIH தலைவர் சகோதரர் மன்சூர் அவர்கள் தலைமை வகித்தார். நீடாமங்கலம் நூருல் ஹுதா பள்ளி தலைவர் A. ரஹ்மத்துல்லாஹ் அவர்கள் முன்னிலை வகித்தார். நிகழ்வில் ஜோதிமலை இறைப்பணி திருக்கூட்டம் நிறுவனர் தவத்திரு திருவடிக்குடில் சுவாமிகள், அஸ்ஸலாம் இஸ்லாமியக் கல்லூரி இயக்குனர் பேராசிரியர் N. அமானுல்லாஹ் மற்றும் நீடாமங்கலம் புனித மேரிஸ் பள்ளி தலைமை ஆசிரியை அருட்சகோதரி சவேரியம்மாள் ஆகியோர் கலந்து கொண்டு சமூக நல்லிணக்கம் குறித்து சிறப்புரையாற்றினர்.

நிகழ்வில் அனைத்து சமூக மக்களும், ஊர் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு ஒன்றிணைந்து நோன்பு துறந்தது நிகழ்ச்சியின் சிறப்பாக அமைந்தது. தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில், இஸ்லாம் மற்றும் இந்நிகழ்வு குறித்து பல்வேறு

கருத்துக்கள் பகிரப்பட்டன. இதில் கோவில் தர்மகர்த்தா ஒருவர், அடுத்த ஆண்டு இஃப்தார் நிகழ்ச்சியை தங்கள் கோவிலில் நடத்த ஏற்பாடுகள் செய்வதாக தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த 120 பேரை உட்பட மொத்தம் 150-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை கூத்தாநல்லூர் JIH பொறுப்பாளர் S. சபீர் அலி அவர்கள் தொகுத்து வழங்கினார். இறுதியாக நீடாமங்கலம் JIH வட்ட பொறுப்பாளர் சகோதரர் சர்புதீன் அவர்கள் நன்றி உரையாற்ற, நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## சமுதாய நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி – புதுக்கோட்டை...



புதுக்கோட்டை மாவட்ட இஸ்லாமிய வழக்கறிஞர்கள் சார்பில் 16.03.2026 அன்று, நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள வழக்கறிஞர்கள் சங்கக் கட்டிடத்தில் சமுதாய நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் திரு. S. முத்தையன் அவர்கள் தலைமை தாங்கினார். வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் திரு. S. ரமேஷ், வழக்கறிஞர்கள் S. முகமது சுல்தான் மற்றும் M. பாரூக் அலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சி ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மண்டல பொறுப்பாளர் G. சையது முஹம்மது அவர்களின் துவக்க உரையுடன் தொடங்கியது.



இதனைத் தொடர்ந்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி மாநிலத் தலைவர் மௌலவி A. முஹம்மது ஹனீபா மன்பயீ அவர்கள் சிறப்புரையாற்றி, ரமலானின் ஆன்மீகப் பயன்கள் மற்றும் சமூக நல்லிணக்கத்தின் அவசியத்தை விளக்கமாக எடுத்துரைத்தார்.

மாண்புமிகு மாவட்ட முதன்மை நீதிபதி திரு. K. பூர்ண ஜெய் ஆனந்த் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மேலும் அத்தியாவசிய பண்டங்கள் சிறப்பு நீதிபதி T. பன்னீர் செல்வம், மாவட்ட மகிளா நீதிபதி R. கனகராஜ், கூடுதல் மாவட்ட நீதிபதி N. S. மீனா சந்திரா, தலைமை குற்றவியல் நீதிபதி K. S. பால்பாண்டியன், முதன்மை சார்பு நீதிபதி L. ரகுபதி ராஜா, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு செயலாளர் E. ராஜேந்திரகண்ணன் உள்ளிட்ட பல நீதிபதிகள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் 150-க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வின் ஒரு பகுதியாக, நீதிபதிகள் அனைவருக்கும் “இஸ்லாம் மனித குலத்திற்கு வழங்கியது என்ன?” என்ற நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இறுதியாக அனைவரும் இணைந்து இஃப்தார் நோன்பு துறந்து, நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## நீதி, இணக்கம், பாதுகாப்புப் பெறும் நாளாக இந்தப் பெருநாள் அமையட்டும்...

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி A. முஹம்மது ஹனீஃபா மன்பயீ அவர்களின் பெருநாள் செய்தி: ரமளான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று, திருமறை ஓதலும் ஈதலும் மூலம் இறையச்சப் பயிற்சி பெற்று பெருநாள் கொண்டாடும் அனைவருக்கும் இதயம் கனிந்த நல்வாழ்த்துகள்.

ரமளான், திருமறை குர்ஆன் அருளப்பெற்ற மாதமாகும். திருக்குர்ஆன் உலக மக்களுக்கு அருளாக அனுப்பப்பட்ட வேதமாகும். அது நீதியைப் போதிக்கிறது. நீதியான சமுதாயத்தில்தான் இணக்கம் உருவாகிறது; அமைதி நிலவுகிறது; பாதுகாப்பு உறுதியாகிறது.

திருக்குர்ஆன் நீதிமிக்க சமுதாயத்தை உருவாக்க அழைக்கிறது. வாய்மைக்கும் நீதிக்கும் உறுதியாக நிற்பவர்களுக்கே இறையருளும் வெற்றியும் கிடைக்கும். நீதியற்ற சூழலில் அநீதி மேலோங்குகிறது; அமைதி சீர்குலைகிறது; பாதுகாப்பு குறைகிறது; மனிதர்களிடையேயான இணக்கம் பாதிக்கப்படுகிறது. எனவே, நீதியின் பக்கம் நிற்பது உலக அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான முக்கிய வழியாகும்.

இந்நேரத்தில் உலகின் பல பகுதிகளில், குறிப்பாக மத்திய கிழக்கில் நடைபெற்று வரும் மோதல்கள் வேதனையை அளிக்கின்றன. அநீதி மற்றும் அராஜகம் நீங்கி, நீதி மற்றும் அமைதி நிலைநாட்டப்பட நாம் அனைவரும் பிரார்த்திக்க வேண்டும்.

ரமளான் நமக்கு அளித்த பயிற்சிகளை நடைமுறைப்படுத்தி, குர்ஆனிய மதிப்புகளுடன் வாழும் சமுதாயமாக மாற்றுவோம். நீதிக்காக எப்போதும் குரல் கொடுப்போம். இந்த இனிய நாளில் அமைதியும் இன்பமும் அனைவரையும் சூழட்டும். எல்லாருக்கும் பேரன்பின் ஈகை வாழ்த்துகள். ஈத் முபாரக்!

## பெருநாள் திடல் தொழுகை

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பூர் கிளையின் சார்பாக ஈதுல் ஃபித்ர் பெருநாள் திடல் தொழுகை சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த தொழுகையில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறார்கள் உள்ளிட்ட 500-க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தொழுகையை நிறைவேற்றினர். பின்னர் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்புடன் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டு பெருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.



## “போர் இல்லா உலகம் அமைய வேண்டும்” – சமய நல்லிணக்க ஒன்று கூடல்...




கும்பகோணம் காந்தி பூங்காவில், ஜோதிமலை இறைப்பணி திருக்கூட்டம் சார்பாக அமைதி பதாகைகள் ஏந்திய சமய நல்லிணக்க ஒன்று கூடல் நடைபெற்றது. உலகில் நிலவி வரும் மோதல்களுக்கு தீர்வாக போர் அல்ல, நீதி மற்றும் அமைதியே ஒரே வழி என்பதை வலியுறுத்தும் வகையில் இந்த நிகழ்வு அமைந்தது.

ஈரான்–அமெரிக்கா மோதல் உள்ளிட்ட உலகளாவிய பதற்ற நிலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், நீதி நிலைநாட்டப்பட்டு அமைதி ஏற்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. ரஷ்யா–உக்ரேன், ஈரான்–இஸ்ரேல், அமெரிக்கா போன்ற நாடுகள் உட்பட அனைத்து பகுதிகளிலும் போர் தீர்வாகாது, உலக அமைதியே மனிதகுலத்தின் நிலையான நலனாகும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

இந்த ஒன்று கூடலில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலச் செயலாளர் S.N. சிக்கந்தர், திருவடிக்குடில் சுவாமிகள், அருட்தந்தை கோஸ் மான் மற்றும் கும்பகோணம் மறை மாவட்ட அருட்சகோதரிகள் உள்ளிட்ட பல்வேறு சமயங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டு அமைதியின் அவசியத்தை எடுத்துரைத்தனர்.

## ஈகைத் திருநாள் வாழ்த்து – பத்திரிகைச் செய்தி.

புது தில்லி: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) அகில இந்திய தலைவர் சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி, முஸ்லிம்கள் அனைவருக்கும் மற்றும் நாட்டில் வாழும் அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் இதயப்பூர்வமான ஈகைத் திருநாள் (ஈதுல் ஃபித்ர்) வாழ்த்துகளைத் தெரிவித்தார். ஊடகங்களுக்கு அளித்த அறிக்கையில் அவர் கூறியதாவது: “ஈகைத் திருநாள் என்பது திருக்குர்ஆன் அருளப்பட்டதை கொண்டாடும் ஒரு முக்கியமான நிகழ்வாகும். இது, குர்ஆனுடனான நமது பிணைப்பை உறுதிப்படுத்தி, அதன் போதனைகளின்படி செயல்பட உறுதியேற்பதற்கான தருணமாகும். அல்லாஹ் நமக்கு அளித்த நேர்வழிக் காட்டும் அருட்கொடைக்காக நன்றி செலுத்தும் நாளாக இது திகழ்கிறது. ரமலான் மாதம், இறையச்சம், மன உறுதி மற்றும் சுயக்கட்டுப்பாட்டை வளர்க்கும் ஒரு பயிற்சி காலமாக அமைந்துள்ளது. இம்மாதத்தில் நாம் மேற்கொள்ளும் நோன்பு, தொழுகை மற்றும் தான தர்மங்கள், குர்ஆனிய வாழ்க்கையை நடைமுறைப்படுத்த உதவுகின்றன. பெருநாளைக் கொண்டாடும் இந்த நேரத்தில், ரமலான் நமக்குத் தந்த இந்தப் பயிற்சிகளை வாழ்வில் கடைப்பிடிப்பது அவசியமாகும். உலகம் பல்வேறு சவால்கள் மற்றும் மோதல்களை எதிர்கொள்ளும் இந்நேரத்தில், அமைதி, நீதி மற்றும் மனிதநேயம் நிலைநாட்டப்பட



வேண்டும். நமது நாட்டின் முன்னேற்றம், ஒற்றுமை மற்றும் அமைதிக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அனைத்து மதத்தினரிடையிலும் நல்லிணக்கம் நிலவட்டும்" என்று அவர் வலியுறுத்தினார். இந்த இனிய பெருநாளில் அனைவருக்கும் அமைதி, மகிழ்ச்சி மற்றும் செழிப்பு நிலவட்டும் எனவும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

## ஞானபீட விருது பெற்ற கவிப்பேரரசு வைரமுத்து அவர்களை ஜமாஅத் சார்பில் வாழ்த்து சந்திப்பு...



இலக்கிய உலகின் உயரிய விருதான ஞானபீட விருது பெற்ற கவிப்பேரரசு வைரமுத்து அவர்களை, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பாக 25 மார்ச் 2026 அன்று நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. இச் சந்திப்பின் போது, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், சமரசம் இதழ் மற்றும் இஸ்லாமிக் பவுண்டேசன் டிரஸ்ட் (IFT) ஆகியவற்றின் பணிகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அவற்றின் அனுபவங்களும் நினைவுகளும் பகிர்ந்து கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் மாநில ஆலோசனைக் குழு உறுப்பினரும் சென்னை மாநகரத் தலைவருமான N. நசீர் அதாவுல்லாஹ், மாநில ஆலோசனைக் குழு உறுப்பினரும் சமரசம் இதழின் பொறுப்பாசிரியருமான வி. எஸ். முஹம்மத் அமீன், சென்னை மாநகரச் செயலாளர் அஷ்ரப் அலீ ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வின் நினைவாக சமரசம் இதழும், IFT வெளியிட்ட நூல்களும் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு பரிசாக வழங்கப்பட்டது. இலக்கியமும் சமூகப் பணியும் இணையும் அர்த்தமுள்ள நிகழ்வாக இந்தச் சந்திப்பு அமைந்தது.

## "ஈரான் உச்சத் தலைவரின் இந்திய பிரதிநிதியுடன் சந்திப்பு"

27.03.2026 – வெள்ளிக்கிழமை காலை, சென்னையில் இந்தியாவில் உள்ள ஈரான் உச்சத் தலைவரின் பிரதிநிதி டாக்டர் மாஜீத் ஹகீம் இலாஹி அவர்களையும், ஜனாப் சையத் தகி ஹைதர் நக்வி அவர்களையும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி A. முஹம்மது ஹனீஃபா மன்பயீ அவர்கள் தலைமையிலான மாநில பிரதிநிதிகள் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில் எஸ். என். சிக்கந்தர், நசீர் அத்தாவுல்லா, அஷ்ரஃப் அலி, யூனுஸ் சேட், ஜான் முஹம்மது மற்றும் சகோதரி ராபியா பஸ்ரி ஆகியோர் கலந்து கொண்டனர். அன்பும் மரியாதையும் மிக்க சூழலில் நடைபெற்ற இந்தச்



சந்திப்பில், ஈரான் மக்களுக்கு முழுமையான ஆதரவும் மனமார்ந்த பிரார்த்தனைகளும் தெரிவிக்கப்பட்டன. மேலும், சமரசம் இதழில் வெளிவந்த ஈரான் தொடர்பான கட்டுரை வழங்கப்பட்டு, இந்திய மக்களின் ஆதரவும் எடுத்துரைக்கப்பட்டது. இதற்கு பதிலளித்த டாக்டர் மாஜீத் ஹகீம் இலாஹி அவர்கள், இந்திய மக்களின் ஒத்துழைப்பை பாராட்டி தனது மகிழ்ச்சியை தெரிவித்தார். மனிதநேயமும் அன்பும் நிறைந்த இந்த கலந்துரையாடல், இருதரப்பினருக்கும் மனநிறைவை அளித்த சிறப்பான சந்திப்பாக அமைந்தது.

## ஈகைத் திருநாள் இனிய சங்கமம்...

29.03.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை, காலடிப்பேட்டை பெண்கள் இஸ்லாமிய மைய அரங்கத்தில் “ஈகைத் திருநாளின் இனிய சங்கமம்” நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் ஜனாப் அஜிஸ் லுத் ஃபுல்லா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் சகோதர சமூகத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் “இஸ்லாம் சில நிமிடங்களில்” மற்றும் “இவர்களின் பார்வையில் நபிகள் நாயகம்” ஆகிய புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. மேலும், நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டு, நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.



## இதயங்களை இணைக்கும் ஈகை திருநாள் சந்திப்பு...

அஸ்ஸலாமு அலைக்கும். 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை, செங்கல்பட்டு மாவட்டம் மேடவாக்கத்தில் உள்ள ஏஜிஎஸ் பார்ட்டி ஹாலில் “இதயங்களை இணைக்கும் ஈகை திருநாள் சந்திப்பு” நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக அருட்தந்தை Dr. C. பவுல்ராஜ் மற்றும் ஸ்ரீதேவி கருமாரியம்மன் கோவில் தலைமை குருக்கள் திரு S. ஜெகன் ராஜா குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றினர். மேடவாக்கம் ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி சிவபூஷனம் ரவி மற்றும் திமுக ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் R. S. லோகேஷ்வரா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநில அமைப்புச் செயலாளர் K. ஜலாலுதீன் அவர்கள் சிறப்புரையாற்றி, இந்தியாவில் வெறுப்பை அகற்றி அன்பை வளர்க்க இத்தகைய ஒன்றுகூடல்கள் மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தினார். மேலும், இறைவன்




மனிதனை எப்போதும் கண்காணித்து வருகிறான் என்ற உணர்வை வளர்க்கவும், ஒருநாள் நாம் செய்த செயல்களுக்கு கணக்குக் கொடுக்க வேண்டியதைக் நினைவூட்டவும் ரமளான் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கினார். இந்த நிகழ்ச்சியில் சகோதர சமுதாயத்தினர் சுமார் 250 பேரும், இஸ்லாமியர்கள் 100 பேரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். அல்ஹம்துலில்லாஹ்.

## ஈகைப் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி...

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளை சார்பாக 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு விநாயகா மஹாலில் ஈகைப் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. நகர தலைவர் சகோதரர் சிபகத்துல்லாஹ் தலைமை தாங்கினார். தொடக்கமாக மௌலவி இஸ்மாயில் ஃபலாஹி அவர்கள் இறைவசனம் ஓத, அதன் தமிழாக்கத்தை சகோதரர் சுஹைல் வாசித்தார். தொடர்ந்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் புதுச்சேரி மண்டல அமைப்பாளர் சகோதரர் அப்துல் ஹமீத் அவர்கள் நோக்க உரையாற்றினார்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் ஓம் சாந்தி K. சங்கர் மற்றும் மாவட்ட செயலாளர் திரு நாராயணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கவிஞரும் எழுத்தாளருமான முனைவர் ஓசூர் மணிமேகலை அவர்கள் நபிகள் நாயகம் போதித்த பெண்ணியம், குடும்ப வாழ்க்கை மற்றும் சமூகப் பொறுப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். தொடர்ந்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு மாநில செயலாளர் திரு S.N. சிக்கந்தர் அவர்கள், ரமலான் மாதம் மனிதனை நல்லொழுக்கம் கொண்ட வாழ்விற்கு பயிற்றுவிக்கும் முக்கியத்துவம் குறித்து விளக்கி, ஈகைப் பெருநாளின் அர்த்தத்தை வலியுறுத்தினார்.



நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களுக்கு "அண்ணலாரின் ஆளுமைகள்" என்ற நூல் வழங்கப்பட்டது. இறுதியாக, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி நகர செயலாளர் திரு முஹம்மது மாஸ் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். நிகழ்ச்சியை சகோதரர் இப்ராஹிம் அவர்கள் சிறப்பாக வழிநடத்தினர். எல்லா புகழும் இறைவனுக்கே.